**தலைப்பு 17 – பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 மதிப்பீடுகளை தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிராகரம், சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவின மதிப்பீடுகளை தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணம் 127(5) இன் பிரகாரம், திணைக்களத்தின் மதிப்பீடுகளின் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலவினங்களுக்கிடையில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான வேறுபாடுகள் கூடிய அளவில் பரிசோதிக்கப்பட வேண்டியதுடன், 17-01-01-2102 செலவின விடயத்திற்காக ரூபா 1,500,000 ஆன அடிப்படை செலவின மதிப்பீடு, ஆண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 2,560,000 ஆக ரூபா 1,060,000 இனால் அதாவது 70 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. | கோவிட்-19 நிலைமை காரணமாக பார்வையாளர்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டதால், சபாநாயகர் அலுவலகத்தில் குறைந்த செலவில் காணொளி மாநாட்டு முறையை (Video conference system) நிறுவ திறைசேரியின் இணக்கப்பாடுடன் நிதியேற்பாடுகளை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செலவுகள் துல்லியமாக மதிப்பிடப்பட்டு வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.1.2 நிதியேற்பாடு குறைவாக பயன்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், செலவினப் பரிசோதனையின் போது 01-2401 செலவின விடயத்தின் கீழான தேறிய நிதியேற்பாடு ரூபா 500,000 ஆக காணப்பட்டதுடன், செலவினம் ரூபா 263,500 ஆனமையால் ரூபா 263,500 இனால் சேமிப்புகள், அல்லது 47 சதவீதமான சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | நிலவும் கோவிட் சூழ்நிலை காரணமாக ஊழியர்கள் கூடுவதைத் தடுப்பதற்காக அத்தியாவசியப் பயிற்சித் திட்டங்களைத் தவிர மற்ற பயிற்சித் திட்டங்களுக்கு ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டாம் என்ற சுகாதார ஆலோசனையின் காரணமாக, மதிப்பிடப்பட்ட ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகளால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுகளின் குறிப்பு இலக்கம் (III) இன் கீழ் உள்ள பொறுப்புகளின் பெறுமதி, திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றுடன் இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன், அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பொன்று கடந்த வருடத்தின் செலவினமாக 2022 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட கூடாத போதிலும், திறைசேரியினால் வெளியிடப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் குறிப்பிடப்படாத ரூபா 96,102 கூட்டுத்தொகையான பொறுப்புகள் 2022 ஆம் ஆண்டின் | "பீ" வகுப்பு திணைக்களமொன்றில் CIGAS கட்டமைப்பினுள் செலவினம் மேற்கொள்வதற்கு முன்னரே பதிவேற்றம் செய்தல் (Commitment Upload) இடம்பெறாமையால், திறைசேரியினால் வெளியிடப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் உள்ளடக்கப்படாது. | நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பில் வெளியிடப்படும் வழிகாட்டல்களுக்குரியதாக வெளியிடப்பட்டிருந்த பொறுப்புகள் கூற்றுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் ‘‘பீ’’ வகுப்பு திணைக்களங்களுக்காக கணக்கு வைத்தல் தொடர்பில் இது வரையிலும், அறிவுரை வழங்கப்பட்டிராத காரணத்தால், கணக்கு தொடர்பில் எதிர்காலத்தில் எமக்கு வழங்கப்படும் அறிவுரைகளின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

**3.1.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை 2/2020 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கமைய மீளாய்வாண்டின் வருடாந்த பெறுகைகள் திட்டம், அதற்கு முன்னைய வருடத்தின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை பெற்று அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட்-19 நிலைமை காரணமாக அலுவலகப் பணிகளை மேற்கொள்வதில் உள்ள சிரமத்தின் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் திட்டத்தின் நகல் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் சரியாக செயல்பட உரிய ஆலோசனை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |